**MAY 2022** **P/ID 35327/PTL4T**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையளிக்க.

1. சிலப்பதிகாரம் - சொல் விளக்குக.
2. இளங்கோவடிகள் பற்றி நீர் அறிவன யாவை?
3. இரட்டைக் காப்பியங்கள் யாவை?
4. சிலம்பின் யாப்பு வடிவம் குறித்து எழுதுக.
5. கோவலனின் தந்தை யார்?
6. நாயன்மார் - சொற்பொருள் கூறுக.
7. திருநின்ற சருக்கத்திலுள்ள பகுதிகள் யாவை?
8. மாதவி - யார்?
9. தேம்பாவணி - சொற்பொருள் சுட்டுக.
10. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் எவை?
11. உமறுவை ஆதரித்த வள்ளல்கள் யாவர்?
12. சீறாப்புராணக் காண்டங்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. காண்டம், காதை என்னும் சிலப்பதிகார அமைப்பியலை எடுத்துரைக்க.

14. சிலப்பதிகாரம் கலைப்பெட்டகமாகத் திகழுமாற்றைத் தெளிவுறுத்துக.

15. அப்பரை வணங்கி, அப்பூதியார் வீடுபேறு அடைந்த பாங்கைப் பகர்க.

16. மகோதரன் சாரதியைப் பணித்தது என்ன?

17. தன் மகனைப் பற்றி மரியாள் கூறியன யாவை?

18. 'பாவ நோய்க்கு மருந்தாக முகமதுநபி பிறந்தார்' - விளக்குக.

19. உமது பாடப் பகுதிக் காப்பியங்கள் வகுத்துரைக்கும் அறநெறிகள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. சிலப்பதிகாரத்தின் பாவிகத்தை விளக்குக.

21. கோவலன் கண்ணகி ஆகியோரின் இல்லற வாழ்க்கையை எடுத்துரைக்க.

22. சேக்கிழாரின் கதை கூறும் திறனைத் திறனாய்க.

23. இராமனின் வீர மாட்சியை எடுத்துரைக்க.

24. தேம்பாவணியிலும், சீறாவிலும் காணலாகும் இலக்கிய நலங்களை விளக்குக.

———————